**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 26** /2022

2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09ம் நாள் புதன்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.க.ராக்கப்பன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | சின்னதம்பி | **தொழில் :** | விவசாயம் |
| **தந்தை/கணவர் பெயர் :** | ராமசாமி | **சமயம் :** | இந்து |
| **ஊர் :** | மன்னங்காடு | **வயது** | 89 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**09.11.2022**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1–ம் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை மற்ற வாதிகளுக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 18.01.2021ம் தேதியிட்ட தாவா புல எண் 63 க்கான கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட புல வரைபடம் **வா.சா.ஆ.1** ஆகும். 27.07.2010 ம் தேதியிட்ட தாவா புல எண் 55 க்கான கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். 23.01.2021ம் தேதியிட்ட 1ம் எதிர்வாதிக்கு வாதிகள் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 27.01.2021ல் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.3** ஆகும். 12.02.2022ல் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 25.02.2022ல் கணினி சிட்ட கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது அது **வா.சா.ஆ.5** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக

பிராத்திக்கிறேன்.

**1 முதல் 6 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S.d/-Chennathambi

*Taken down by the typist to my dictation
in open Court read over to the
witness admitted and acknowledged
by him/her to be Correct.*

S.d/-M.Ravichandran,B.A.,B.L.

District Munsif, Pattukkottai.